பதிவு அஞ்சல்/ஒப்புதல் அட்டையுடன்

## தேசிய நெடுஞ்சாலை

அனுப்புநர்
திருமதி. த. சாந்தி, பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர்,
தேசியநெடுஞ்சாலை,
திருநெல்வேலி-07.

பெறுநர்
M/s. Sri Kamaachi Engineering Contracts
No. 6/373, Madurai Road,
Checkanurani,
Madurai – 625514.

ந. எண்.டி.ஆர்.பி.202/ 2023– 2024/ இவஅ–1 / நாள்.19.02.2024

ஐயா,

பொருள்: ஒப்பந்தங்கள் – திருநெல்வேலி (தே.நெ) வட்டம் – விருதுநகர் (தே.நெ) கோட்டம் – CRIF 2023–24 – Widening Two lane with paved shoulder and Improvements at km 14/6 – 20/4 of Uppoor – Kottaiyur Road – வேலை உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. தங்களது ஒப்பந்த புள்ளி நாள். 30.01.2024.
2. ஒப்பந்தப்புள்ளி ஆணையம் சென்னை செ.மு.க. எண்.10/336–1/COMM/Techcell/2024/நாள். 16.02.2024.
3. தலைமைப்பொறியாளர் (தே.நெ) சென்னை அவர்களின் குறிப்பாணை எண். 1026/ஒப்–2/தே.நெ./2024/(சி.ஆர்.10 வருடம்) நாள்.16.02.2024

*****

மேலே குறிப்பிட்டுள்ள பணிக்கு தங்களால் குறைத்துக் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தமானது ஒப்பந்தத் தொகை ரூ. 12,27,73,475/– (ரூபாய் பன்னிரெண்டு கோடியே இருபத்து ஏழு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து நானூற்று எழுபத்து ஐந்து மட்டும்) (அடிப்படை விலை ரூ.10,40,45,318/– & சரக்கு மற்றும் சேவை வரி 18% ரூ. 1,87,28,157/–) மதிப்பீட்டு விலைக்கு 0.02% குறைவாக (2023–2024) ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இன்றிலிருந்து 15 தினங்களுக்குள் இத்துறையினரால் நிர்ணயிக்கப்பட்ட நமூனாவில் உடன்படிக்கை செய்ய இவ்வலுவலகத்திற்கு கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தங்களால் முன் வைப்பு தொகை ரூ. 6,25,000/–க்கு வங்கி வைப்பு தொகை இரசீது வடிவில் ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்துள்ளீர்கள். ஒப்பந்த நிபந்தனைகளின்படி மேலே குறிப்பிட்டுள்ள முன் வைப்புத்தொகைக்கு பதிலாக அதற்கு சமமான தொகைக்கும், பிணை வைப்புத்தொகையாக மொத்தம் ரூ.24,56,000/–க்கு கோட்டப்பொறியாளர் (தே.நெ) விருதுநகர் பெயரில் ஈடுசெய்யப்பட்ட அஞ்சலக சேமிப்பு பத்திரங்கள்/அஞ்சலக வைப்பு தொகை கணக்குகள்/முதிர்வடையாத கிஸான் விகாஸ் பத்திரங்கள்/தேசியமயமாக்கப்பட்ட வங்கி வைப்புத்தொகைக்கான இரசீது வடிவத்தில் பெற்று இவ்வலுவலகத்திற்கு உடன்படிக்கை கையெழுத்திட வரும்பொழுது கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

உடன்படிக்கையில் கையெழுத்திடுமுன் நடப்பு ஆண்டிற்கான வருமானவரி செலுத்தியதற்கான சான்றிதழ் மற்றும் சரக்கு மற்றும் சேவைவரி செலுத்தியதற்கான சான்றிதழ் முதலானவை கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தொழில்நுட்ப உதவியாளர் நியமனம் செய்துள்ளதற்கான சான்றிதழை ஒப்பந்த நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்று கையெழுத்திட வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

| | |
|---|---|
| Above Rs.10.00 Crore upto Rs.50.00 Crore | One B.E. Degree Holder in Civil Engineering with one year experience in similar works and Two Diploma holders in Civil Engineering with five years experience in similar works |

தொழில்நுட்ப உதவியாளர்களிடம் பட்டம் மற்றும் பட்டயச்சான்றிதழ் நகலினை பெறுவதோடு தங்களுக்கு தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரிய சம்மதம் கொடுத்துள்ளார் எனவும் வேறு ஒருவருக்கும் மற்றும் வேறு யாதொரு பணிக்கும் தொழில்நுட்ப உதவியாளராக பணிபுரியவில்லை என்ற கடிதத்தினையும் முன் அனுபவ சான்றுடன் பெற்று ஒப்பந்த உடன்படிக்கையில் கையெழுத்திட வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

மேற்படி உடன்படிக்கைதான் மேற்படி வேலை சம்பந்தமாக தங்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள உரிமைகளை வழங்கும் பத்திரமென அறியவும், உடன்படிக்கை ஒப்புக்கொள்ளும் முன்னே வேலை தொடங்கலாகாது. உடன்படிக்கை ஒப்புக்கொள்ளாத வரையில் தாங்கள் வேலை ஆரம்பித்து உண்டாகும் நஷ்டத்திற்கு அரசாங்கம் பொறுப்பல்ல.

இவ்வேலை உடனடியாக தொடங்கி முன்னேற்றம் காண்பிக்க வேண்டுமானால் எக்காரணத்தைக் கொண்டும் தவறாமல் மேற்குறிப்பிட்ட தினங்களுக்குள் இவ்வலுவலகம் வந்து உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும். அவ்வாறு கையெழுத்திட தவறினால் அதனையே போதுமான காரணங்களாகக் கொண்டு இவ்வேலை உத்திரவை தள்ளுபடி செய்வதோடு அரசால் உறுதி செய்யப்பட்ட நஷ்டத்தை சரிகட்டுவதற்காக நெடுஞ்சாலைத்துறை நடைமுறை நூல் தொகுதி –I பகுதி–I முதல்நிலை விபரக்குறியீடு எண். 104–05–ன் படி மேற்படி வேலைக்கு தங்களால் கொடுக்கப்பட்டுள்ள முன் வைப்புத் தொகையும் பறிமுதல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

19/2/2024.

கண்காணிப்புப்பொறியாளர்,
தேசியநெடுஞ்சாலை,
திருநெல்வேலி.

19/2/2024

நகல் : கோட்டப்பொறியாளர் (தே.நெ) விருதுநகர்

Signature Not Verified
Digitally signed by THANKAPPAN SANTHI
Date: 2025.03.21 10:36:33 IST
Location: eProcure-EPROC